செய்தி வெளியீடு எண் : 26 நாள்:20.07.2020

**தேனி மாவட்டம்.**
**மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் சார்பில் 122.18 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் திட்டப்பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்க்கொண்டார்:-**

*******

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் இன்று (20.07.2020) தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் சார்பில் நடைபெற்று வரும் குடியிருப்புகள் கட்டுமானப்பணிகளை, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் பார்வையிட்டு ஆய்வு மேற்க்கொண்டார்.

**இந்த ஆய்வின் போது, மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது,**

தமிழக அரசு ஏழை, எளிய மக்களின் நலன் கருதி, தமிழகத்தில் குடிசைகளே அல்லாது அனைவருக்கும் கான்கீரிட் வீடு கிடைக்கப் பெறும் வகையில், ஊராட்சி பகுதிகளில் வசிக்கின்ற மக்களுக்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் முதலமைச்சரின் சூரிய ஒளியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டம், நகராட்சி மற்றும் பேரூராட்சிப்பகுதியில் வசிக்கின்ற நகர்ப்புற மக்களுக்கு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் சார்பில் அனைவருக்கும் வீடு கட்டும் திட்டம் போன்ற திட்டங்களை செயல்படுத்தி, அதன் மூலம் தகுதியான நபர்களை பயன்பெறச் செய்து வருகிறது.

அதன்படி, தேனி மாவட்டத்தில் தகுதியான பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அதில் ஒரு குடியிருப்பிற்கென, பயனாளிகளின் பங்காக ரூ.1.00 இலட்சமும், மத்திய அரசின் பங்காக ரூ.1.50 இலட்சமும், தமிழக அரசின் பங்காக ரூ.6.00 இலட்சமும் என மொத்தம் ரூ.8.50 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு பயனாளிக்கு, ஒரு குடியிருப்பு வீதம் கட்டி வழங்கப்படவுள்ளது.

மேலும், மாவட்டத்தில் மேற்கண்ட திட்டத்தின் கீழ் 2019-20-ஆம் நிதியாண்டில், கீழ்கண்ட பகுதிகளில் மொத்தம் ரூ.122.18 கோடி மதிப்பிட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதில், தேனி, வடவீரநாயக்கன்பட்டியில் ரூ.31.17 கோடி மதிப்பீட்டில் 13 அடுக்குமாடி பகுதியில் 312 குடியிருப்புகள் தொடர்பாக நடைபெற்று வரும் பணிகளில், முதற்கட்டமாக 6 அடுக்குமாடி பகுதிகளில் 144 குடியிருப்புகளின் கட்டுமானப்பணிகளும் மற்றும் தப்புக்குண்டில் ரூ.43.02 கோடி மதிப்பீட்டில் 18 அடுக்குமாடி பகுதியில் 432 குடியிருப்புகள் தொடர்பாக நடைபெற்று வரும் பணிகளில், முதற்கட்டமாக 5 அடுக்குமாடி பகுதிகளில் 120 குடியிருப்புகளின் கட்டுமானப்பணிகளும் மற்றும் கோம்பை சிக்காட்சி அம்மன் கோவில் அருகில் ரூ.47.99 கோடி மதிப்பீட்டில் 15 அடுக்கு மாடி பகுதியில் 480 குடியிருப்புகள் தொடர்பாக நடைபெற்று வரும் பணிகளில் முதற்கட்டமாக 5 அடுக்குமாடி பகுதிகளில் 160 குடியிருப்புகளின் கட்டுமானப்பணிகளும் நிறைவுற்று, தற்சமயம் தயார் நிலையில் உள்ளன.

மேற்கண்ட மூன்று பகுதிகளில் முழுமையாக நிறைவு பெற்ற குடியிருப்புகளை வருகின்ற ஆகஸ்ட் மாதத்திற்குள் மாவட்ட நிர்வாகத்திடம் ஒப்படைப்பு செய்திடவும், மீதமுள்ள குடியிருப்பு கட்டுமானப்பணிகளை விரைந்து முடித்து, வருகின்ற செப்டம்பர் மாதம் இறுதிக்குள் மாவட்ட நிர்வாகத்திடம் ஒப்படைப்பு செய்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேற்க்கண்ட மூன்று பகுதிகளிலும் நடைபெற்றுவரும் பணிகள் தொடர்பாக, இன்றைய தினம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், மாவட்டத்தில் உள்ள தகுதியான நபர்களுக்கு குடியிருப்புகளை விரைவில் வழங்குவதற்கு ஏதுவாக நடைபெற்று வரும் இக்குடியிருப்பு பணிகளை, விரைந்து முடிப்பதற்கு அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, கம்பம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.டி.கே.ஜக்கையன், மாவட்ட வருவாய் அலுவலர் க.ரமேஷ், பெரியகுளம் சார் ஆட்சியர் (வருவாய் கோட்டம்) சி.சினேகா,இ.ஆ.ப., தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய மேற்பார்வை பொறியாளர் சண்முகசுந்தரம், மாவட்ட ஊராட்சித் தலைவர் க.பிரிதா, ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் எஸ்.கவிதா, உதவி பொறியாளர் மணிபாலன் மற்றும் ஒப்பந்தகாரர்கள் - பாண்டியராஜன், முத்துகோவிந்தன், காந்தி உட்பட சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**